## ஆகஸ்ட் - 08 – செவ்வாய்

**புனித டோமினிக்**
**“நம்பிக்கை குன்றியவனே, ஏன் ஐயம் கொண்டாய்?”**
**மத். 14:31**

### முதல் வாசகம் : எண்ணாகமம் ட2: 1– 13

மோசே எத்தியோப்பியப் பெண்ணை மணந்திருந்தார் அவர் மணந்திருந்த எத்தியோப்பியப் பெண்ணை முன்னிட்டு மிரியாமும் ஆரோனும் அவருக்கு எதிராகப் பேசினர். அவர்கள், ”ஆண்டவர் உண்மையில் மோசே வழியாக மட்டுமா பேசியுள்ளார்? அவர் எங்கள் வழியாகவும் பேசவில்லையா?” என்றனர். ஆண்டவர் இதனைக் கேட்டார்.பூவுலகின் அனைத்து மாந்தரிலும் மோசே சாந்தமிகு மானிடராய்த் திகழ்ந்தார்.உடனே ஆண்டவர் மோசே, ஆரோன், மிரியாம் ஆகியோரிடம், ”நீங்கள் மூவரும் சந்திப்புக் கூடாரத்தருகே வாருங்கள்” என்றார். அவர்கள் மூவரும் வந்தனர்.மேகத்தூண் ஒன்றில் ஆண்டவர் இறங்கி வந்து கூடார வாயிலருகே நின்று ஆரோனையும் மிரியாமையும் அழைத்தார் அவர்கள் இருவரும் முன்வந்தனர்.அவர் கூறியது: என் வார்த்தைகளைக் கேளுங்கள் உங்களுக்குள் இறைவாக்கினன் ஒருவன் இருந்தால் ஆண்டவராகிய நான் ஒரு காட்சியின் வழியாக அவனுக்கு என்னை வெளிப்படுத்துவேன். கனவில் அவனோடு பேசுவேன்.ஆனால் என்அடியான் மோசேயோடு அப்படியல்ல் என் வீடு முழுவதிலும் அவனே நம்பிக்கைக்குரியவன். நான் அவனோடு பேசுவது மறைபொருளாக அல்ல, நேர்முகமாகவும் தெளிவாகவும் இருக்கும். ஆண்டவர் உருவையும் அவன் காண்கிறான். பின்னர் ஏன் என் அடியான் மோசேக்கு எதிராகப் பேச நீங்கள் அஞ்சவில்லை?மேலும் ஆண்டவரின் சினம் அவர்கள்மேல் மூண்டது் அவர் அகன்று சென்றார்.கூடாரத்தின் மேலிருந்து மேகம் அகன்றதும் மிரியாமை பனிபோன்ற வெண்மையான தொழுநோய் பீடித்தது் ஆரோன் மிரியாம் பக்கம் திரும்பவே அவள் தொழுநோயாளியாயிருக்கக் கண்டார்.ஆரோன் மோசேயிடம், ”என் தலைவரே! அறிவீனமாக நாங்கள் செய்த பாவத்தை எங்கள்மேல் சுமத்த வேண்டாம்தாயின் வயிற்றிலிருந்து செத்துப் பிறந்த அரைகுறைக்குழந்தை போன்று இவள் ஆகாதிருக்கட்டும் ”என்றார்.மோசே ஆண்டவரிடம் முறையிட்டு, ”கடவுளே, இவளைக் குணமாக்க வேண்டுகிறேன்” என்றார்.

**பதில்பாடல்:** கடவுளே உமது பேரன்புக்கேற்ப எனக்கு இரங்கும்

**நற்செய்தி: லூாக்கா 14:22 – 36** (நற்செய்தி வேறுபடலாம்)

அக்காலத்தில் இயேசு கூட்டத்தினரை அவ்விடத்திலிருந்து அனுப்பிக் கொண்டிருந்தார். அப்பொழுது சீடரையும் உடனே படகேறித் தமக்குமுன் அக்கரைக்குச் செல்லுமாறு அவர் கட்டாயப் படுத்தினார்.மக்களை அனுப்பிவிட்டு, அவர் தனியே இறைவனிடம் வேண்டுவதற்காக ஒரு மலையின்மேல் ஏறினார். பொழுது சாய்ந்தபிறகும் அங்கே அவர் தனியே இருந்தார்.அதற்குள் படகு கரையிலிருந்து நெடுந்தொலை சென்றுவிட்டது. மேலும் எதிர்க்காற்று அடித்துக்கொண்டிருந்ததால் அலைகளால் படகு அலைக்கழிக்கப்பட்டது.இரவின் நான்காம் காவல்வேளையில் இயேசு அவர்களை நோக்கிக் கடல்மீது நடந்து வந்தார்.அவர் கடல்மீது நடப்பதைக் கண்ட சீடர் கலங்கி, ”ஐயோ, பேய்” என அச்சத்தினால் அலறினர்.உடனே இயேசு அவர்களிடம் பேசினார். ”துணிவோடிருங்கள் ் நான்தான், அஞ்சாதீர்கள்” என்றார்.பேதுரு அவருக்கு மறுமொழியாக, ”ஆண்டவரே நீர்தாம் என்றால் நானும் கடல்மீது நடந்து உம்மிடம் வர ஆணையிடும்” என்றார்.அவர், ”வா” என்றார். பேதுருவும் படகிலிருந்து இறங்கி இயேசுவை நோக்கிக் கடல்மீது நடந்து சென்றார்.அப்பொழுது பெருங்காற்று வீசியதைக் கண்டு அஞ்சி அவர் மூழ்கும்போது, ”ஆண்டவரே, என்னைக் காப்பாற்றும்” என்று கத்தினார்.இயேசு உடனே தம் கையை நீட்டி அவரைப் பிடித்து, ”நம்பிக்கை குன்றியவனே, ஏன் ஐயம் கொண்டாய்?” என்றார்.அவர்கள் படகில் ஏறியதும் காற்று அடங்கியது.படகில் இருந்தோர் இயேசுவைப் பணிந்து, ”உண்மையாகவே நீர் இறைமகன்” என்றனர்.அவர்கள் மறு கரைக்குச் சென்று கெனசரேத்துப் பகுதியை அடைந்தார்கள்.இயேசுவை யாரென்று அறிந்துணர்ந்த அவ்விடத்து மக்கள் சுற்றுப் புறமெங்கும் ஆள் அனுப்பி எல்லா நோயாளர்களையும் அவரிடம் கொண்டு வந்தனர்.அவரது மேலுடையின் ஓரத்தையாவது அவர்கள் தொட அனுமதிக்குமாறு அவரை வேண்டினர் தொட்டவர் யாவரும் நலமடைந்தனர்.

**தியானம்:** நாம் அனைவரும் கிறிஸ்துவை ‘ஆண்டவர்’ என பெயரளவில் ஏற்றுக்கொண்டிருப்பதால் நாம் கிறிஸ்தவர்கள் என அழைக்கப்படுகின்றோம். செயலளவில் மிரியாமையும், ஆரோனையும் போல அன்றாடம் நல்லவர்களைக் குற்றம் சுமத்துவதிலும், முணுமுணுத்தலிலும், நல்லவைகளைக் குறைகூறுவதிலும் நமது விசுவாசக் குறைவை நாம் எண்பித்து வருகின்றோம். நற்செயல்கள் கடவுளுக்கு உகந்தவை. நல்ல உள்ளங்கள் கடவுளுக்குப் பிரியமானவை. நல்லவர்களை மனம்நோகச் செய்யும்போதும், அவர்களது நற்செயல்களையும் நாம் கொச்சைப்படுத்தும்போது கடவுள் நம்மைக் கண்டிக்கின்றார். பல தடவைகளில் கடவுள் நமக்கும் நம் குடும்பத்துக்கும் செய்ய பல அருஞ்செயல்களையும், ஆசீர்வாதங்களையும் எண்ணி வியந்து நிற்கின்றோம். அடுத்த கணமே நம் வாழ்வில் வீசும் சோதனைப் புயலைக் கண்டு கலங்கி விடுகின்றோம். சில சமயங்களில் அவற்றில் மூழ்கிவிடப் பார்க்கின்றோம். அச் சமயங்களிலெல்லாம் நாம் கடவுளை நோக்கி நம் கைகளை நீட்டத் தயக்கம் கொள்ளக்கூடாது என்பது இன்றைய இறைவார்த்தைகள் நமக்குக் கற்றுத்தரும் பாடமாகும். நமது விசுவாசக் குறைவை அவர் கடிந்து கொண்டாலும்கூட, நமக்குக் கை கொடுத்துக் காப்பாற்றக் காத்திருக்கின்றார் என்பதும் இன்றைய இறைவார்த்தைகள் நமக்குத் தரும் உறுதிமொழியாகும்.